<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், இலால்குடி.</u>
<u>அ.வ.எண்.28/2010</u>
<u>நாள். 03.08.2026</u>

2026ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 03.08.2026 ஆம் தேதி என்பவரின் வாக்குமூலம் (1989–ம் ஆண்டு 55வது விதியின் 9வது ஏற்பாட்டின்படி) திரு.S. ராஜீவ்காந்தி உதவியாளர் என்பவரது ஆணையீட்டால் உறுதி கூறப்படுகின்றது. பிரமாணம் செய்யப்படுகிறது.

===================================================================

| | |
|---|---|
| பெயர் = திரு.மதி | தகப்பனார் பெயர்= திரு.காலிங்கன் |
| கிராமம் = | தாலுக்கா = |
| தொழில் = | வயது = |

===================================================================

<u>PW3 மு.வி</u>

1) நான் இவ்வழக்கில் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். எனக்கு சொந்த ஊர் சிறுதையூர், நாகம்மையார் கோவில் தெருவில் எனது தந்தை காலத்தில் இருந்து 30–40 வருடங்களாக வசித்து வருகிறேன். எனது தந்தை பெயர் காலிங்கன், தாயார் பெயர் இளஞ்சியம். எனது பெற்றோர் தற்போது உயிருடன் இல்லை. எனது தந்தை 1–1/2 வருடத்திற்கு முன்பு காலமாகிவிட்டார். எனது தந்தைக்கு நான் இறப்பு சான்றிதழ் பெற்றுள்ளேன்.

2) எனது தாயார் 1மாதத்திற்கு முன்பு காலமாகிவிட்டார். எனது தந்தை கூலி வேலை செய்து வந்தார். எனது தந்தை நாகம்மையார் கோவில் தெரு ஊர் தலைவராக 10–15 வருடத்திற்கு முன்பு இருந்தார். மேற்படி கிராமத்தில் நடக்கும் நல்லது கெட்டதிற்கு சென்று வேண்டிய உதவிகளை செய்வார். எங்களது தெருவில் ராஜமாணிக்கம் என்பவர் முன்பு இருந்தார். எங்களது தெருவில் சேட்டு மனைவி ஆச்சிக்கண்ணு இருந்தாரா என்றால் முன்பு இருந்தார்.

3) மேற்படி ஆச்சிக்கண்ணு தற்போது உயிருடன் உள்ளாரா என்றால் நான் தற்போது அண்ணா நகரில் வசிப்பதால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் நாகம்மையார் கோவில் தெருவிலிருந்து அண்ணா நகருக்கு எப்போது சென்றேன் என்றால் வெகு நாட்களுக்கு முன்பே எனது தகப்பனார் காலத்திலேயே சென்றுவிட்டேன். எனது தகப்பனார் எனக்கு சொத்து ஏதேனும் எழுதி வைத்துள்ளாரா என்றால் வீடு எழுதி வைத்துள்ளார்.

4) எந்த தெருவில் உள்ள வீட்டை எனது தகப்பனார் எனக்கு எழுதி வைத்துள்ளார் என்றால் அண்ணா நகரில் உள்ள வீட்டை. எனது தந்தை எனக்கு பத்திர அலுவலகத்தில் எழுதி கொடுத்தாரா என்றால் ஆமாம், பழைய நீதிமன்றம் அருகில் உள்ள பத்திர அலுவலகத்தில் எழுதி கொடுத்தார். எனக்கு எழுதி கொடுத்த ஆவணத்தில் எனது தந்தை கையொப்பம் செய்துள்ளாரா அல்லது கைரேகை செய்துள்ளாரா என்றால் அது ஆவணத்தை பார்த்தால் தான் தெரியும்.

5) மேற்படி ஆவணம் என் கைவசம் உள்ளதா என்றால் உள்ளது. அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும்.

(வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி முதல் விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கானது ஒத்திவைக்கப்படுகிறது. )

ஒப்பம்/– ப. கோபாலஅரசி,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி.
இலால்குடி.

/உண்மை நகல்/

P GOPALA ARASI
Digitally signed by P GOPALA ARASI

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
இலால்குடி.